செய்தி வெளியீடு எண்: 547 நாள்: 16.08.2018

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) ஆகிய போக்குவரத்துக் கழகங்களின் இயக்குநர்கள் குழுக் கூட்டமானது (Board Meeting) மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.P.W.C.டேவிதார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.08.2018) பல்லவன் இல்லம், கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை துணைச் செயலாளர் திரு.பி.பிரபாகர் இ.ஆ.ப., நிதித்துறைத் துணைச் செயலாளர் திரு.எச்.கிருஷ்ணன் உன்னி இ.ஆ.ப., போக்குவரத்துக் கழக நிதி நிறுவன இணை மேலாண் இயக்குநர் திரு.எம்.சுகுமார் மற்றும் தொடர்புடைய போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் / குழு இயக்குநர்கள் திருவாளர்கள் அ.அன்புஆபிரகாம், (மா.போ.க.), வி.பாஸ்கரன், (அ.வி.போ.க.சென்னை), ஜி.கணேசன் (விழுப்புரம்), வி.அரவிந்த் (சேலம்), ஆர்.முத்துக்கிருஷ்ணன் (கோயம்புத்தூர்), பி.ரவீந்திரன் (கும்பகோணம்), கே.மோனி (திருநெல்வேலி), திரு.எம்.பன்னீர்செல்வம் (மேற்பார்வைப் பொறியாளர்/ நெடுஞ்சாலைத்துறை/ விழுப்புரம்), தனி இயக்குநர்கள் திரு.எஸ்.ரகுநாதன், திருமதி.பிரியா வேணுகோபால், போக்குவரத்துத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள், செலவீனங்களை குறைத்து நிதி நிலையை மேம்படுத்துதல், பணியாளர்களின் பதவி உயர்வு, பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விரைந்து முடித்தல், பணிமனைகளை பழுது நிவர்த்தி செய்தல், பழைய பேருந்துகள் மற்றும் அலுவலக வாகனங்களை கழிவு செய்தல், அண்மையில் சட்டப்பேரவையில் போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துதல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய பேருந்துகளின் இயக்கம் மற்றும் வசூல் நிலவரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு கிராமப்புற மக்களின் போக்குவரத்துத் தேவைகளை ஈடு செய்கின்ற வகையில் கூடுதல் பேருந்துகளை இயக்குதல் உள்ளிட்ட பல்வேறு பொருள் நிரல்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டன.

இறுதியாக, தலைமை வகித்த போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தமது உரையில் ''மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நமது அனைத்து போக்குவரத்துக் கழகங்களையும் மேம்படுத்திட வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில், உயர்மட்ட அளவிலான ஆலோசனை கூட்டங்களை நடத்தி, தகுந்த அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில், நமது போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கையில் இதுவரை இல்லாத வகையில், புதிய பல்வேறு நல்ல திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, மேலாண் இயக்குநர்களும், பொது மேலாளர்களும் முனைப்புடன் பணியாற்றி, போக்குவரத்துக் கழகங்களின் செலவீனங்களை குறைத்து சேவைகளை விரிவுபடுத்தி இலாபம் ஈட்டிட அர்ப்பணிப்போடு பணியாற்றிட வேண்டுமாறு கேட்டுக் கொண்டார்''.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**